# ஆய்வுச்சுருக்கம்

தெல்தெனிய கல்வி வலய தமிழ் மொழிமூல பாடசாலைகளின் பண்புத்தர விருத்தியில் உள்ளகமேற்பார்வை: நடைமுறைகளும் சவால்களும் என்பதே இவ்வாய்வுத் தலைப்பாகும். 2017-2018 வரையான காலப்பகுதிகளில் கிடைக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தெல்தெனிய கல்வி வலய தமிழ் மொழிமூலப் பாடசாலைகளின் பண்புத்தரம் குறைவாக உள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. பாடசாலைகளின் பண்பை விருத்தியடையச் செய்வதில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்ற போதும், உள்ளகமேற்பார்வை நடைமுறைகள் மிகமுக்கிய காரணியாக அமைகின்றது. ஆகவே அதிபர்கள், மேற்பார்வையாளர்கள் உள்ளகமேற்பார்வை நடைமுறைகளை விருத்திசெய்வது தொடர்பாக கவனத்திற்கொள்வது அவசியமாகும் என்ற அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வின் பிரதான நோக்கம் தெல்தெனிய கல்வி வலய தமிழ் மொழிமூலப் பாடசாலைகளின் பண்புத்தர விருத்தியில் உள்ளகமேற்பார்வை நடைமுறைகளையும், சவால்களையும் கண்டறிதலாகும். இந்நோக்கை அடைந்துக்கொள்வதற்காக ஒன்பது குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டு, விவரண கலப்புமுறை வடிவத்தில், தொகைசார், பண்புசார் அணுகுமுறையில் ஆபிரகாம் மாஸ்லோ வின் தேவைகளின் வரிசைமுறைக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படுவதுடன், ஆய்வுடன் தொடர்புபட்ட கடந்தகால இலக்கியங்களும் ஆராயப்பட்டுள்ளன. மேலும் ஆய்வின் இலக்குக்குடித்தொகை, மத்தியமாகாணத்தின் தெல்தெனிய கல்வி வலயத்தில் உள்ளடங்குகின்ற மெததும்பர கோட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மொழிமூல இடைநிலை பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களாகும். எழுமாற்று மாதிரி எடுப்பில் 50 ஆசிரியர்களும், 10 மேற்பார்வையாளராக செயற்படும் ஆசிரியர்களும் மாதிரிகளாக தெரிவுச்செய்யப்பட்டனர். தரவுகளை திரட்டுவதற்காக வினாக்கொத்தும், அவதானிப்புபடிவமும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சதவீதம்கணித்தல், இடை மற்றும் நியம விலகல் என்பவற்றை பயன்படுத்தி திரட்டப்பட்ட தரவுகள், பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில் பாடசாலைகளின் பண்புத்தரத்தை விருத்திசெய்யும் வகையிலான உள்ளகமேற்பார்வை செயற்பாடுகள் பூரணத்துவமானதாகவும், திருப்தியானதாகவும் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. அதாவது சில ஆசிரியர்களே மேற்பார்வை உத்திகள் சிலவற்றை பயன்படுத்துகின்றனர். மேற்பார்வை உத்திகள் தொடர்பான அறிவு அதிகமான ஆசிரியர்களிடம் குறைவாகவே உள்ளது. எனவே அதிபர், ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஊடாக வழங்கும் பயிற்சிகள் ஊடாகவும், அதிபர், மேற்பார்வையாளர்கள் பாடசாலையில் மேற்கொள்ளும் சிறப்பான மேற்பார்வைச் செயற்பாடுகள் வாயிலாகவும் பாடசாலையின் பண்புத்தரத்தை விருத்தி செய்ய முடியும் என பிரேரிக்கப்பட்டுள்ளது.

Abstract

The research topic is about the Internal supervision in Quality improvement of secondary Tamil Medium schools in Teldeniya Educational Zone: Actions and Challenges. Based on data received during the period of 2017 – 2018, it is observed that the standard of Tamil medium schools in Teldeniya Zone is poor. Though there are many factors which influences the improvement of quality of the school, internal supervisory activities are considered as the most important factor. Therefore, it is important for principal and supervisors to consider the improvement of internal supervisory activities. This research is carried out based on this criterion. The primary objective of this research is to find out about the internal supervisory activities which would develop the quality of school and challenges faced by selected Tamil medium schools in Teldeniya Educational Zone. To achieve this primary objective of research, nine additional objectives are put forward and discussed based on quantitative and qualitative approach and Abraham Maslow's hierarchy of needs with relation to past documentaries. The research was carried out targeting a group of teachers of secondary Tamil schools in Medadumbara Division of Teldeniya Educational Zone, Central province, randomly selecting 50 teachers and 10 who serve as supervisors. Questionnaire and observation tools were used to collect data. Data collected were analyzed by percentage calculation, Medium and standard deviation. It was found in the end of the research that the internal supervisory activities which would improve the quality of schools were not complete and satisfactory. Through this it was realized that the supervisory tactics were utilized only by

some teachers while most of the others had poor knowledge on this aspect. Therefore it is recommended that quality of schools can be improved by carrying out training programs and seminars to principals and teachers and also through best practices adopted by principals and supervisors regarding supervisory activities.